மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மாதவரம் பால் பண்ணையில் தற்சமயம் 39 உரிமக்காரார்கள் உள்ளனர்.

(ஆ) இவர்களுடைய 461 மாடுகளும் 261 இளங்கன்றுகளும் தற்சமயம் உள்ளன.

(இ) கொழுப்புச்சத்து, கொழுப்புச்சத்து அல்லாத மற்ற திடப்பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் பாலின் விலை நிர்ணயிக்கப்பட்டு, பால்வள நிறுவனத்தாரால் உரிமக்காரார்களிடமிருந்து பால் வாங்கப்படுகிறது.

(ஈ) தரப்படுத்தப்பட்ட பால் சென்னை நகரில் பால் அட்டை வைத்திருப்போருக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ. 2.00 வீதம் விநியோகம் செய்யப்படுகிறது. பாலிதின் பையில் அடைத்த பால் லிட்டருக்கு ரூ. 2.10 வீதம் விற்கப்படுகிறது.

சென்னை நகரில் பால் வழங்கல்.

* வினா 419 திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நடமாடும் வான் மூலமாக தானாக இயங்கும் விற்பனை முறையில் சென்னை நகரில் பால் விற்பனை செய்யும் திட்டம் சோதனை முறையில் நடத்திப்பார்க்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து முடிவெடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் சோதனை முறையில் நடத்திப் பார்க்கப்படவில்லை.

தற்சமயம் தானியங்கி இயந்திரமில்லாத நான்கு நடமாடும் பால் விற்பனை ஊர்திகள் மூலம், சென்னை நகரத்தில் பாலும், பால்பண்ணை உற்பத்திப் பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

* Q. 420.—THIRU S. GANESAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Dairy Development Corporation has opened automatic milk supply booths in Madras ;

(*b*) the cost of its installations; and

(*c*) whether public opinion is against this?